தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி - ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

25 ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. அக்பர் 4/9/29, பள்ளிவாசல் தெரு, புளியரை, தென்காசி. 2) சு. சப்பாணி 3-5-34, கண்டங்காட்டு தெரு, இலத்தூர், தென்காசி. 3) வை. லிங்கம் 5-20-40, மனக்காட்டு தெரு, அச்சன்புதூர், தென்காசி. 4) ப. சண்முகவேல் 4வது தெரு, சதியன் மேடு, செங்கோட்டை புதூர், தென்காசி. 5) சி. முத்தையாசாமி தங்கமுத்து அம்மன் கோவில் தெரு, அச்சன் புதூர், தென்காசி மாவட்டம்.

கடையநல்லூர் நகரம்

அமைப்பாளர் - சு. பேச்சிமுத்து 16இ. 3 திலகர் தெரு, கிருஷ்ணாபுரம், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க. பாண்டி 23/ஏ-1, கீழப்பாளையம் தென்வடல் தெரு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர் - 627751. 2) மா. அன்னலெட்சுமி 221/5, கிருஷ்ணன் கோவில் வடக்கு தெரு, கிருஷ்ணபுரம் - 627759. 3) சு. முத்துக்குமார் 35, கண்ணார் தெரு, மேலக்கடையநல்லூர். 4) ஆ. மாரியப்பன் எண். 28/149, கற்பக விநாயகர் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம் - 627759. 5) சு. மாரிச்செல்வம் 10/19, நாடார் கீழத் தெரு, மேலக்கடைய நல்லூர், தென்காசி.

செங்கோட்டை நகரம்

அமைப்பாளர் - ந. கண்ணன் 30, அம்பேத்கார் தெரு, செங்கோட்டை - 628809, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பே. பரமசிவன் 72/61, திருவள்ளுவர் தெரு, செங்கோட்டை - 627809. 2) வீ. குமாரவேல் 30, செல்வ விநாயகர் கோவில் தெரு, செங்கோட்டை - 627809. 3) மு. ராமசாமி வாணியர் தெரு, செங்கோட்டை - 627809. 4) சு. பாபு 14/27, சமாதானம் தெரு, செங்கோட்டை - 627809. 5) பி. முருகையா 4. செல்லையா தெரு, செங்கோட்டை - 627809.

தென்காசி நகரம்

அமைப்பாளர் - ச. வெங்கடாசலம் முப்புடாதியம்மன் கோவில் தெரு, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கு. முருகானந்தம் 29/58, உச்சிமாகாளியம்மன் 2ம் தெரு, கீழப்புலியூர், தென்காசி மாவட்டம். 2) ஆர். செய்யது அம்பியா 571, வடக்கு மவுண்ட் ரோடு, தென்காசி. 3) அ. முகம்மது அலி 129/6, பாறையடி 2ம் தெரு, தென்காசி. 4) வே. முத்து மாங்கம்மா சாலை, தென்காசி மாவட்டம். 5) எஸ். மாரியப்பன் 46/108ஏ, கூளக்கடை தெரு, தென்காசி.

சுரண்டை நகரம்

அமைப்பாளர் - கா. சண்முகசுந்தரம் 6-7-75, பிள்ளையார் கோவில் தெரு, கீழச்சுரண்டை , சுரண்டை, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. குத்தாலிங்கம் 17/8/44, விவேகானந்தர் தெரு, சிவகுருநாதபுரம், சுரண்டை, தென்காசி. 2) இரா. நகுலன் 6-5-6. வடக்கு தெரு, கீழச்சுரண்டை, சுரண்டை, 3) மா. பிரின்ஸ்குமார் கீழச்சுரண்டை, சுரண்டை, தென்காசி. 4) சு. கணேஷ் 4-1-3, வடக்கு தெரு, கீழச்சுரண்டை, சுரண்டை.

இலஞ்சி பேரூர்

அமைப்பாளர் - சு. சாமித்துரை ஜுப்லி தென்வடல் தெரு, இலஞ்சி, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. மணிகண்டன் நாராயணசாமி கோயில் தெரு, இலஞ்சி. 2) சி. தங்கராஜ் நாராயணசாமி கோயில் தெரு, இலஞ்சி, 3) வே. சுபாஷ் உச்சிமாகாளியம்மன் கோவில் தெரு, இலஞ்சி.

மேலகரம் பேரூர்

அமைப்பாளர் - கு. பகவதிராஜ் 17, தெப்பகுளம் தெரு, மேலகரம் தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆத்தியப்பன் 73, முப்புடாதி அம்மன் கோவில் தெரு, மேலகரம். 2) ச. சாமியா சர்ச் தெரு, குடியிருப்பு. 3) கு. சுப்பிரமணியன் வடக்கு தெரு, குடியிருப்பு, தென்காசி மாவட்டம்.

குற்றாலம் பேரூர்

அமைப்பாளர் - கு. முத்துகுமார் 170, அண்ணா நகர், குற்றாலம், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) இசக்கிராஜ் 58/பி, ஐந்தருவி ரோடு, குற்றாலம், தென்காசி. 2) த. கருப்பசாமி 57, மத்தளம்பாறை ரோடு, குற்றாலம், தென்காசி. 3) ஜெ. ரவிகுத்தாலிங்கம் 63/32, சன்னதி பஜார் குற்றாலம், தென்காசி.

சுந்தரபாண்டியபுரம் பேரூர்

அமைப்பாளர் - செ. சாமி 9-3-27-6ஏ, மதகுதெரு, சுந்தரபாண்டியபுரம், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஈ. சுப்பையா 10/1, பம்படி தெரு, சுந்தரபாண்டியபுரம், தென்காசி மாவட்டம். 2) ப.இசக்கி மேட்டு காலனி, சுந்தரபாண்டியபுரம், தென்காசி. 3) க. துரை 21/பி, டாணா தெரு, சுந்தரபாண்டியபுரம், தென்காசி மாவட்டம்.

வடகரை பேரூர்

அமைப்பாளர் - சி. அப்துல்காதர் 51/ஜாகிர் உசேன் நகர் 4-வது தெரு, வடகரை, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அப்துல்ரஹீம் 30/2, ஜாகிர் உசேன் நகர் 4வது தெரு, வடகரை, தென்காசி மாவட்டம். 2) சு. வீரமுத்து உண்மை விநாயகர் கோவில் தெரு, வாவா நகரம், வடகரை, தென்காசி மாவட்டம். 3) சாகுல் கமீது 31/ஏ, ரகுமானியபுரம், வடகரை, தென்காசி மாவட்டம்.

பண்பொழி பேரூர்

அமைப்பாளர் - மை. பாதுஷாமசூது ஊ.அ.நா. தெரு, பண்பொழி - 627807. தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வே. வெள்ளியப்பன் கரிசல் வடகரை யூனியன் சாலை, கரிசல்குடியிருப்பு, தென்காசி மாவட்டம். 2) மா. பிச்சையா பள்ளிக்கூடத் தெரு, கரிசல்குடியிருப்பு, பண்பொழி - 627807. 3) சு. கருப்பசாமி கந்தசாமிபுரம், பண்பொழி - 627807.

கீழப்பாவூர் பேரூர்

அமைப்பாளர் - தி. காலசாமி 181-சி, செல்லையா நாடார் தெரு, கீழப்பாவூர், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க. அருணாசலம் 2-1, தேவர் நடுத் தெரு, கீழப்பாவூர், தென்காசி. 2) பெ. கிருஷ்ணசாமி தெற்கு தெரு, மூலக்கரையூர், கீழப்பாவூர், 3) ரா. சிங்கப்பாண்டியன் தெற்கு தெரு, மேலூர், கீழப்பாவூர்.

ஆழ்வார்குறிச்சி பேரூர்

அமைப்பாளர் - சை. விஸ்வநாதன் 5/7, புது தெரு, கல்யாணிபுரம், தென்காசி மாவட்டம். துணை

அமைப்பாளர் - 1) கி. இசக்கி 12/1, திருநீலகண்ட விநாயகர் தெரு, ஆழ்வார்குறிச்சி, தென்காசி. 2) ஈ. மகேஷ் 8, ஈஸ்வரநார் தெரு, பரும்பு, ஆழ்வார்குறிச்சி, தென்காசி. 3) இ. ஆதிமூல பெருமாள் 34, கீழ தெரு, கல்யாணிபுரம், தென்காசி மாவட்டம்.

முக்கூடல் பேரூர்

அமைப்பாளர் - ச.முத்தப்பா 29, ஹெச் காந்தியார் தெரு, கலியன்குளம், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) செ. சிவராமன் அம்மன் கோவில் தெரு, கலியன்குளம், தென்காசி மாவட்டம். 2) ஹ. ரமேஷ் 20/பி, பாரதியார் தெரு, முக்கூடல், 3) ஜெ. முத்துகிருஷ்ணன் காந்தி தெரு, சடையப்பபுரம்.

அச்சன்புதூர் பேரூர்

அமைப்பாளர் - கி. அய்யப்பன் அண்ணாவி தெரு, பார்வதிபுரம், அச்சன்புதூர், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. காசி அண்ணாவி தெரு, பார்வதிபுரம், அச்சன்புதூர், தென்காசி. 2) பா. தங்கச்சாமி 2, 1 மெயின் ரோடு, மேக்கரை, அச்சன்புதூர் 3) வே. லிங்கதுரை 14-3-28, பசும்பொன் நகர், அச்சன்புதூர்.

சாம்பவர் வடகரை பேரூர்

அமைப்பாளர் - ப. பெருமாள் 13-1-32/7, யாதவர் தெற்கு தெரு, சாம்பவர் வடகரை, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா. ராஜேந்திரன் 4-2-11ஏ, செக்கடி கிணற்றுத் தெரு, சாம்பவர் வடகரை. 2) மா. ராமர் 1-9-80, அணைந்த பெருமாள் தெரு, சாம்பவர் வடகரை. 3) அ. அருள்ராஜ் 13ஏ/1, கொம்புமாடசாமி கோவில் தெரு, சாம்பவர் வடகரை.

புதூர் பேரூர்

அமைப்பாளர் - கா. குமார் தெற்கு தெரு, லாலா குடியிருப்பு, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) தா. ராஜேஷ் வடக்கு தெரு, லாலா குடியிருப்பு, தென்காசி மாவட்டம். 2) ரா. சக்திவேல் பிள்ளையார் கோவில் தெரு, மேலபுதூர், 3) மூ. திருமலை வேல்சாமி நடுத் தெரு, தவணை, தென்காசி.

குறிப்பு : 1. ஆலங்குளம் பேரூர், 2. ஆய்க்குடி பேரூர் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17-02-2025.

அன்னியூர் சிவா,எம்.எல்.ஏ.,
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

முதல்வர் மு.க.ஸ்டாலின் 'மக்கள் பணியே முதல் பணி' என்று செயல்படுகிறார்!

இந்தியாவில் உயர் கல்வியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு!

திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிறைவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு – அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பரிசு வழங்கினார்!

சென்னை, பிப். 19 -

சென்னை, சைதாப் பேட்டை, தமிழ்நாடு திறந் தநிலை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திரு வள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிறைவு போட்டியில் வெற்றி பெற்ற 37 மாவட் டங் களைச் சேர்ந்த 333 மாணவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழினை வழங்கி, கரு ணையடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கி மற்றும் வெளிநாடு செல்ல தடையின்மைச் சான்று வழங்க இணையவழி நுழை வாயிலினை (Online Portal) தொடங்கி வைத்தார். இந்நி கழ்ச்சிக்கு உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமய மூர்த்தி, தலைமை வகித் தார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் , அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலை மையில் (31.12.2024) அன்று, முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறு வப்பட்டு வெள்ளி விழா, கொண்டாடப்பட்டது. திருக்குறள் சார்ந்த போட்டி களில் வெற்றி பெற்ற கன்னி யாகுமரி மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கினார்.

அப்போது, முதல மைச் சர் அவர்கள், தமிழ்நாட் டின் 38 மாவட்டங்களிலும், திருவள்ளு வர் சிலை நிறு வப்பட்ட வெள்ளி விழா கொண்டாட்டத்தினை மா ண வ ர் க ளி டை யே கொண்டு சேர்க்கும் வகை யில் போட்டி களை நடத்தி பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்க ஆணை யிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்க ளின் ஆணைக்கிணங்க திருக்குறள் தொடர்பாக ஓவியம், ரீல், குறும்படம் என மூன்று போட்டிகள் கல்லூரி மாணவ மாணவிய ருக்கு அனைத்து மாவட் டங்களிலும் நடத்தப்பட் டன. மீதமுள்ள 37 மாவட்டங்களில் வெற்றி பெற்ற 333 மாணாக்கர்கள், இந்தத் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்க ழகப் பட்டமளிப்பு அரங் கத்தில் பரிசுகளையும் சான் றிதழ்களையும் அளிப்பதில் நான் பெருமைக் கொள்கி றேன். பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அய்யன் திருவள்ளு வ ருக்கு குறளோவியம் எழு திச் சிறப்புச் செய்தவர் டாக் டர் கலைஞர். வள்ளுவர் கோட்டம் அமைத்து வர லாற்றில் திருவள்ளுவருக்கு அழியா மாபெரும் அடை யாளச் சின்னம் கண்டவர் அன்புத் தலைவர் நமது கலைஞர். இதன் சிகரமாகத்தான், 1999இல் கன்னியாகுமரியில் 133 அடி உயரத் திருவள்ளுவர் சிலை யைக் கலைஞர் நிறுவினார்.

தமிழ்ப்புத்தாண்டி னை தைத் திங்கள் முதல் நாளில் கொண்டாட ஆணை யிட்டு, தைப் பொங்கலுக்கு அடுத்த நாளினை திருவள்ளுவர் தினமாக நாம் பெருமிதத்தோடு கொண்டாடிட ஆணை யிட்டவர் தலைவர் கலை ஞர் அவர்கள் அந்த அள விற்கு திருவள்ளுவர் மீது மாறாத பற்று கொண்டவர் தலைவர் கலைஞர். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு புதிய அமைச்சகமே கண்டவர் கலைஞர்.

அவர் வழியில் தளபதி அவர்கள் தமிழ்த்துறைக்கு தனியே அமைச்சரை நிய மித்தவர். உயிரைவிட மேலானது மொழி, மொழி யின் மீதும் காதல். மொழிக் காகத் தனித்துறை தனிஅ மைச்சர் கண்டது திராவிட மாடல் அரசு. அய்யன் திரு வள்ளுவரை மாணவர்கள் உள்ளங்களில் இந்த போட் டிகளின் வாயிலாக பதிய வைத்துள்ளார் நமது முதல் வர்.

திருவள்ளுவர் எல்லோ ருக்கும் பொதுவானர். திரு வள்ளுவர், தமிழர்களுக் காக இருக்கக்கூடிய உலக அடையாளம்! திருக்குறள் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம்! திரு வள்ளு வருக்கு சாயம் பூச நினைக் கிற தீயவர்களை விரட்டிய டிக்க கடமைப்பட்டி ருகின்றோம். புது மைப் பெண், தமிழ்புதல்வன் மற் றும் நான் முதல்வன் என முத்தான திட்டங்களை உயர்கல்விக்குக்கு தந்து வர லாற்றில் சாதனைக்கு மேல் சாதனையாகப் படைத்துக் கொண்டிருக்கிறார் நமது தலைவர் தளபதியார்.

மாணாக்கர்களின் உள் ளங்களை மனம் கவர்ந்தவர் நம் முதல்வர் தளபதி அவர் கள். அயராது மக்களுக்காக உழைக்கின்ற நமது துணை முதலமைச்சர் இளைஞர்க ளின் எழுச்சி நாயகனாக திகழ்கிறார். அயல்நாடு செல்லும் ஆசிரியர்களுக் கும் அலுவலர்களுக்கும் எளிதாகவும் குறுகிய காலத் தில் தடையின்மைச் சான்று பெற ஏதுவாக, இணையவ ழியில் நுழைவாயில் (Online Portal), கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் செயல்பாட் டுக்கு வந்துள்ளது. இந்நவீன முயற்சியைத் திறந்து வைப் பதில் மட்டற்ற மகிழ்ச்சிய டைகிறேன்.

மக்கள் பணியே முதல் பணி!

"மக்கள் பணியே முதல் பணி" எனச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் நமது முதலமைச்சர். அவர் வழி யில், "அனைவருக்கும் அனைத்தும்" விரைந்து கிடைக்க உதவும் பல்வேறு "திராவிட மாடல் திட்டங் களில்" இந்த "இணையவழி நுழைவாயில் திட்டமும்" ஒன்றாகும். பல ஆண்டுக ளாக ஆசிரியர்களுக்கு இட மாறுதலுக்கு பொது கலந் தாய்வு நடைபெறாமல் இருந்தது. அதனை தற் போது நடத்தி பல நூறு ஆசிரியர்கள் சமீபத்தில் பய னடைந்துள்ளனர்.

கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை!

கல்லூரிக் கல்வி இயக்க கத்தின் கீழுள்ள அரசு கல் லூரிகளில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசு தாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நிய மன ஆணைகளை இன்று வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். திராவிட மாடல் முதல்வர் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் காவல் அர ணாகக் கழக அரசு என்றும் நிற்கும் என்பதற்கு இது சாட்சி.

பள்ளிகளிலும், கல்லூரி களிலும் தொடர்ந்து அறி வுத் திருவிழாக்கள், கருத்த ரங்கு கள், மாணாக்கர்க ளுக்குப் பல்வேறு போட்டி கள், முனைவர் பட்ட ஆய் வுக்கு முதலமைச்சர் உத வித்தொகைத் திட்டம் எனத் "திராவிட மாடல்" அரசின் முன்னெடு ப்புக ளால், இந்தியாவில் உயர் கல்வியில் தலைசிறந்த மாநி லமாகத் தமிழ்நாடு இன்று உருப்பெற்றுள்ளது. உயர் கல்வியில் மாணவர் சேர்க் கையில் மற்ற மாநிலங்கள் 28% ஆனால், தமிழ்நாடு 48% தற்பொழுது பெற்று முதலிடம். ஆராய்ச்சிப் படிப்பில் தமிழ்நாடு முதலி டம் பெண்கல்வியில் முதலி டம், இது பெரியாரின் கொள்கைக்கு கிடைத்த வெற்றி இதற்கெல்லாம் நமது முதலமைச்சருக்குத் தான், நாம் நன்றி சொல்ல வேண்டும்.

கல்லூரி கல்விக்கே நீட், க்யூட் நுழைவுத் தேர்வை மட்டுமே வைத்து மாணவர் கள் தரத்தை முடிவு செய் வது என்பது முற்றிலும் நய வஞ்சகமானது. 3,5,8 வகுப்பு மணவர்களுக்கு பொதுத் தேர்வு என்பது தேவையற்ற ஒன்று. இது இடைநிற்றலையே ஊக்கு விக்கும். தமிழ்நாடு அரசின் இருமொழிக் கொள்கையை யும் தற்போதுள்ள 10+2+3 என்ற கல்வி முறையே மாற் றக்கூடாது என்பது தமிழ் நாடு அரசின் நிலைப்பாடா கும். நுழைவுத் தேர்வை எதிர்ப்பதில் இந்தியாவி லேயே இன்று மட்டுமல்ல என்றுமே தமிழ்நாடு மட் டும் தான் முன்னணியில் நிற்கிறது. முதலமைச்சர் அ வ ர் க ளி ன் முன்னெடுப்புக்கும், முயற் சிக்கும் பிற மாநிலங்களின் முதல்வர்களும் இந்தியாவி லுள்ள பெரும்பாலான பல் கலைக்கழகங்களும் ஆதரவு தெரிவிக்கின்றன.

இளநிலை கலை அறிவி யல் பட்டத்திற்கு நான்கு ஆண்டு காலம் என்பதும், முதலாண்டு முடித்தால் சான்றிதழும், இரண்டா மாண்டு முடித்தால் பட்ட யமும், மூன்று ஆண்டு முடித்தால் பட்டமும், நான்கு ஆண்டு முடித்தால் சிறப்பு பட்டமும் என விதி முறைகள் வகுத்திருப்பது மாணவர்களின் இடைநிற்ற லையே ஊக்குவிக்கும். முழு மையான கல்வி பயில முற் றிலும் தடையாக இருக்கும். PUC இருந்த காலத்தில் ஒரு பாடத்தில் தோல்வி அடைந் தால் அனைத்து பாடங்க ளையும் எழுதி தேர்ச்சி பெற்றால் மட்டுமே PUC பெறும் நிலை இருந்தது. இதனால் மேற்படிப்பிற்கு எவரும் சேர்க்கை பெற வில்லை. இதே நிலை தான் இந்த நான்கு ஆண்டு பட் டப்படிப்பு கொண்டு வந் தால் ஏற்படும். இதனால் பட்டப் படிப்பில் சேர்பவர் களின் எண்ணிக்கை குறை யவே வழிவகுக்கும். கல் வியை ஒரு சாரார்க்கு மட்டுமே கொண்டு சேர்க் கும் முயற்சியாகும்.

அரசியலமைப்பு கூட்டத்திற்கு எதிரானது!

பல்கலைக்கழக மானியக் குழுவின் நெறிமுறைகளை ஏற்காத பட்சத்தில் பட்டங் களை செல்லாததாக்கப்ப டும் மற்றும் பல்கலைக்கழ கங்களின் அங்கீகாரம் இரத்து செய்யப்படும் என மிரட்டுவது கூட்டாட்சி யின் தன்மையை சீர்குலைக்கும் சதி செயலா கும். இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் எதி ரானது.

மக்களுக்காகவே, உயர் கல்வியில் நமது மாணவர் கள் உலகப்புகழ் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், பல புதிய புதிய திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். இத் திட்டங்களைப் பயன் கொண்டு, நமது மாணவர்க ளும் மாணவிகளும் உயர்கல்வியில் முன்னேறிப் பெரும் சாதனைகளைப் படைக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன். உயர்கல்வி உச்சம் அடைய இனி உயர் கல்வியில் தமிழ்நாடு உலகத் துக்கே வழிகாட்டும் என்று உறுதியளிக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் பேசி யிட்டார்

அமைச்சர் தெரிவிக்கை யில், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம், திருவள் ளூர் மாவட்டம். தேசிய காசநோய் ஒழிப்புத்திட் டம், (NTEP) திருவள்ளூர் மாவட்டம் காசநோய் இல்லா தமிழ்நாடு 2025 என்ற இலக்கினை அடைவ தற்கு பல்வேறு செயல்திட் டங்கள் மூலமாக செயல் ப ட் டு க் கொ ண் டு வருகின்றது. நமது மாவட் டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வழி காட்டுதலின்படி காசநோய் ஒழிப்பு பணி மிகவும் சிறப் பான முறையில் செயல்ப டுத்தபட்டு வருகிறது. ஆவடி மாநகராட்சி பகுதி யில் காசநோய் ஒழிப்பு பணியை துரிதப்படுத்தும் வகையில் ARMOURED VEHICLES NIGAM LIMITED (AVNL), Avadi Nikshay Mitra திட்டத்தின் மூலம் தேசிய காசநோய் ஒழிப்புத்திட்டம் திருவள்ளூர் மாவட்டத் திற்கு நிதி உதவி செய்யும் பொருட்டு CSR நிதி பங்க ளிப்பு திட்டத்தின் மூலம் காசநோய் கண்டுபிடிக்கும் கருவி வாங்குவதற்காக . 28,43,800/ (Twenty eight lakhs forty three thousand eight hundred only) நிதி ஒதுக்கீடு செய்தது பெறப்பட்ட நிதி யின் மூலம் மிகவும் துல்லிய மான முறையில் காசநோய் மற்றும் மாநிலத்திலேயே முதன் முறையாக நமது மாவட்டத்தில் பண்மருந்து எதிர்ப்பு (XDR) காசநோய் கண்டுபிடிக்கும் CBNAAT கருவி கொள்முதல் செய்யப் பட்டு ஆவடி அரசு மருத்து வமனையில் பொருத்தப் பட்டு உள்ளது. இதன் மூலமாக காசநோய் ஒழிப்பு பணி துரிதபடுத்தப்பட்டு ஆவடி மாநகராட்சி பகுதி யில் உள்ள பொதுமக்கள் மிகவும் பயனடைவார்கள் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார் இந்நிகழ்வில் இணை இயக் குநர் நலப் பணிகள் சேகர், துணை இயக்குநர் காச நோய் சங்கீதா, ஆவடி மாந கர பொறுப்பாளர் சன்.பிர காஷ், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், அம்மு விஜயன், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், பகுதிச் செயலாளர்கள் பேபிசேகர், பொன்.விஜயன், நாராயண பிரசாத், ஆவடி அரசு மருத் துவமனை முதன்மை மருத் துவர் காவலன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆவடி அரசு மருத்துவமனையில்

காசநோய் கண்டறியும் அதி நவீன கருவி (CBNAAT) ஆய்வகம்!

அமைச்சர் ஆவடி சா. மு.நாசர் திறந்து வைத்தார்

திருவள்ளூர் பிப் 19;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அரசு மருத்துவம னையில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் காசநோய் கண்டறியும் அதி நவீன கருவி (CBNAAT) ஆய் வகத்தினை திறப்பு விழா நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் தலைமை தங்கி னார் ஆவடி மாநகராட்சி மேயர் கு. உதயகுமார் ஆணையர் ச.கந்தசாமி. முன்னிலை வகித்தார்கள்

இந்நிகழ்ச்சியில் தமிழ் நாடு சிறுபான்மையினர் நலன் வெளிநாடு வாழ் தமி ழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆவடி அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்ட அதிநவீன கருவி ஆய்வகத்தினை தொடங்கி வைத்து பார்வை

னார்.

பின்னர், செய்தியாளர்க ளிடத்தில் தேசிய கல்விக் கொள்கையை ஏற்காவிட் டால் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது என ஒன்றிய கல்வி அமைச்சர் தெரிவித் தது குறித்து செய்தியாளர் கள் கேள்வி எழுப்பியதற்கு, மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட் டிற்கு நிதி கிடையாது என்று Blackmail செய்வதை தமிழர்கள் ஒரு நாளும் பொறுத்துக்கொள்ள மாட் டார்கள். எங்கள் உரி மையை தான் கேட்கிறோம் உங்கள் தனிச் சொத்தை கேட்பது போல் திமிராக பேசினால் தமிழர்களின் தனிக் குணத்தை டெல்லி பார்க்க வேண்டியிருக்கும் என ஏற்கனவே முதலமைச் சர் அவர்கள் தெரிவித்துள் ளார்கள்.

ஒன்றிய அமைச்சரின் இந்த பேச்சு அகம்பாவம் மற்றும் ஆணவத்தின் உச்சம் ஒரு போதும் நிதிக்காக தமிழ்நாடு அரசும் முதல மைச்சரும் யாருக்காகவும் அடி பணிய மாட்டார்கள் என உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரி வித்தார்.

ஆவடி பகுதியில்

1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் நலத்திட்டப் பணிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார் !

திருவள்ளூர் பிப் 19;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகு திக்குட்பட்ட ஆவடி மாநக ராட்சி பகுதியில் 1.10 கோடி மதிப்பீட்டில் மக்கள் நலத்திட்ட பணிகளை அமைச்சர் சாமு நாசர் மற் றும் மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்

ஆவடி மாநகராட்சி பகு தியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா மு நாசர், 1.10 கோடி மதிப்பீட்டில் பல் வேறு மக்கள் நலத்திட்டங் களை நேற்று தொடங்கி வைத்தார்.

அந்த வகையில், தமிழகத் தில் முதன்முறையாக ஆவடி அரசு பொது மருத்து வமனையில், சி.எஸ்.ஆர் நிதி பெற்று, 28 லட்சம் மதிப்பில், காசநோய் கண்ட றியும் அதிநவீன கருவி ஆய் வகத்தை அமைச்சர் நாசர், திருவள்ளூர் மாவட்ட ஆட் சியர் பிரதாப் ஆகியோர் வருகை தந்து திறந்து மக்க ளின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்த கருவி மூலம், காச நோயை துல்லியமாக கண் டறிந்து, 2 மணி நேரத்தில் ஆய்வறிக்கையை பெற முடி யும். தனியார் மருத்துவம னையில் இந்த பரிசோத னைக்கு 2000 முதல் 3000 ரூபாய் வரை செலவாகும். இதைத்தொடர்ந்து, ஆவடி தொகுதிக்குட்பட்ட பகுதி யில் 5 சிந்தாமணி நியாய விலை கடை மற்றும் 2 அமு தம் நியாய விலை கடை, நீண்ட நாள் கோரிக்கை யான 6 மின் மாற்றிகளை அமைத்து மக்கள் பயன் பாட்டுக்கு திறந்து வைத் தார்.

நிகழ்ச்சியின் போது, பொதுமக்களுக்கு இனிப்பு களை வழங்கி மகிழ்ந்தார். மேலும், பொது மக்களிடம் கோரிக்கை மனுகளை பெற்ற அமைச்சர் சா. மு.நாசர், நியாயவிலை கடைகளில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து பொருள்களும் சரியாக சென்றடைய வேண்டும் என அதிகாரிக ளிடம் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணை யர் கந்தசாமி,, மாநகர செய லாளர் சண் பிரகாஷ், ஆவடி மாநகராட்சி பணிகு ழுத்தலைவர் சா.மு.நா. ஆசிம்ராஜா, மண்டல த லை வ ர் க ள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், வி.அம்மு , ஜோதிலட்சுமி, பகுதிச் செயலாளர்கள் பேபிசேகர் பொன்விஜயன், ஜி.நாரா யண பிரசாத், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் என அனைவரும் கலந்து கொண் டனர்.

சீ.வி.திவான்குமார் தலைமையில்

மயிலை மேற்குப் பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

நந்தனம் கி.மதி எம்.சி. பங்கேற்பு!

சென்னை, பிப். 19-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் கழக தலை வர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக செயலாளர் மயிலாப் பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த. வேலு ஆலோச னைபடி, மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் அமைப்பாளர் சீ.வி.திவான் குமார் தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்ப ழகன் எம்.சி. மற்றும் மாவட்ட துணை அமைப் பாளர்கள் தினேஷ் மாணிக் கம், த.விக்னேஸ்வரன் ஆகி யோரின் முன்னிலையில் நடைபெறுகிறது.

மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி. மதி ஆலோசனை வழங் குகிறார்.

இக்கூட்டம் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இன்று 1902 2025 மாலை 6:30 மணி அள வில் ஆலோசனை கூட்டம் நடை பெறுகிறது.

இதில் மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நீ.ஜெய்குமார், இளையக்கு மார், ந.உதயன், ஜெ. ராஜேஷ்குமார், அரவிந்த் ராமேஷ், கு.லோக்கேஷ் கலந்து கொள்ளுமாறு அன் புடன் கேட்டுக் கொள்கி றேன்.

பொருள்: கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்க ளின் பிறந்தநாள் விழா மற் றும் கழக பணி